முருகப்பெருமான் துணை

**மகான் சொரூபானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.02.2024,** வியாழக்கிழமை

1. தவசியே ஞான வள்ளலே
   தன்னலம் கருதா தொண்டர்படை
   அவனியில் படைத்து மாற்றம்
   அனுகூலம் தரவந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அகிலமதில் சோபகிருது சால் திங்கள்
   வரங்களென சூலதிகதி குருவாரம்
   (சோபகிருது வருடம் மாசி மாதம் 03 ம் நாள், 15.02.2024, வியாழக்கிழமை)
   வழங்குவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை சொரூபானந்தர் யானும்
   அகிலம் மேம்பட உரைப்பேன்
   ஆசிதந்து காக்கும் வண்ணம்
   அவதாரம் புரிந்த அரங்கன்
4. அரங்கன் மகிமை உலகமக்கள்
   அறிந்தாலே அனுகி வந்தாலே
   வரங்களாக ஆசி கிட்டியே
   வரும் அவரவர் வாழ்விலும்
5. வாழ்விலும் மாற்றம் தேற்றம்
   வந்தடையும் ஞானியர் பலமாக
   தாழ்வான கருமவினை குற்றம்
   தகாத செயல்பாடு அனைத்தும்
6. அனைத்தும் விலகிட மாற்றம்
   அன்பும் தயவும் கொண்டபடி
   துணையாக நற்குணம் கூடி
   தேசிகனார் தொண்டர்கள் ஆகும்
7. ஆகுமே ஞான தரும பலம்
   அளவிலா கூடி உலகோர்
   மிகையான ஞானப்படைகள் ஆக
   மண்ணுலகில் உலவ இனிதே

8. இனிதே குருமார்கள் பலரும்
இணையிலா மகா சக்திகளும்
இனி உலகில் எதிர்பார்த்த
இணையிலா ஞானத்தலைமை

9. தலைமை உதயம் ஆகி
தக்கபடி ஞானிகள் வெளிப்பட
உலகம் முழுக்க ஞான ஆட்சி
உரைத்திடுவேன் மாற்றமாக நிகழும்

10. நிகழும் அரங்கன் படைத்த
நீதி தருமம் காத்தருளும்
வகையான தரும சாலைகளே
வரலாறு படைக்கும் வண்ணம்

11. வண்ணமுடன் சக்தி கூடி
வையகத்தை மாற்றும் படி
மண்ணுலகில் அற்புதம் நிகழ்த்தும்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—